செ.வெ.எண்: நாள்:08.07.2021

**நாமக்கல் மற்றும் கொல்லிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் (ITI) சேர்க்கை அறிவிப்பு**

நாமக்கல் மற்றும் கொல்லிமலை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் சேர்க்கை தொடங்கி உள்ளது. நாமக்கல் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள தொழிற்பிரிவுகளான நாமக்கல் அரசு ஐ.டி.ஐ-ல் ஆண்கள்/பெண்களுக்கு இரண்டு ஆண்டு படிப்பாக, எலக்ட்ரீசியன், டிராப்ட்ஸ்மேன் (சிவில்), மெஷினிஸ்ட் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கும், ஓராண்டு படிப்பாக மெக்கானிக் ஆட்டோபாடி ரிப்பேர் ஆகிய தொழிற்பிரிவிற்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பெண்களுக்கு மட்டும் ஓராண்டு படிப்பாக கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டென்ட் மற்றும் இரண்டு ஆண்டு தகவல் மற்றும் கம்யூனிகேஷன் டெக்னாலஜி சிஸ்டம் பராமரிப்பு போன்ற தொழிற்பிரிவுகளுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. SSLC தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களும், இதனால் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இடம் கிடைத்திட வாய்ப்புள்ளது.

மாணவர்கள் **28.07.2021** வரை **www.skilltraining.tn.gov.in** என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாதவர்கள் நாமக்கல் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வந்து விண்ணப்பிக்கலாம்.

மேலும், விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.50-/- ஐ இணையதளம் வழியாக Debit card/Credit card/Internet Banking/Gpay வாயிலாக செலுத்த வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்க வரும் போது தங்களது மதிப்பெண் சான்றிதழ் ($10^{th}$/$8^{th}$) ($9^{th}$ மதிப்பெண் சான்றிதழ் 2021 –ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும்), சாதி சான்றிதழ், மாற்று சான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் (முன்னுரிமை கோரும் நேர்வில்) மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவை உடன் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் இலவச பாடப்புத்தகங்கள், விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ், உதவித்தொகை மாதம் ரூ.750/- மற்றும் தங்கும் விடுதி ஆகியவை பெற்று வழங்கப்படும். பயிற்சியின் போது பிரபல தொழில் நிறுவனங்களில் உதவித்தொகையுடன் பயிற்சியும், பயிற்சிகாலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும். எனவே, ITI பயிற்சியில் சேர்ந்து பயனடைவீர்.

மேலும் விவரங்களுக்கு **04286-267976, 267876, 8610530243, 9940856221, 9499055843** என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**ஓம்/-ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**